# நான் கண்ட
# சுந்தர ராமசாமி

செ. திவான்

# நான் கண்ட
# சுந்தர ராமசாமி

செ.திவான் M.A.,M.Phil.,

நூலாசிரியரின் 123 வது நூல்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | நான் கண்ட சுந்தர ராமசாமி |
| பொருள் | : | இலக்கியம் |
| ஆசிரியர் | : | செ.திவான் |
| பதிப்பு ஆண்டு | : | 2020, ஜூன் |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | : | 24 |
| அச்சிட்டோர் | : | குமரேசன், சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி. செல்: 9443379005 |
| வடிவமைப்பு | : | அப்துல் நசீர், நெல்லை. செல்: 9489115236 |


## சமர்ப்பணம்

ஒரே மேடையில் விருதுகள் பெற்றும்
ஒரே அறையில் படுத்துறங்கியும்
ஒரே கருத்துடன் பழகியும்,
ஒரு சேரச் சென்று தமிழகத்தின் இலக்கிய ஆளுமைகளை
ஒன்றாகச் சந்தித்தும், “நல்லா எழுதுங்கோ” என்று
ஓயாமல் உத்திரவிட்டும், வீட்டுக்குச் சென்றால்
ஒப்பில்லா உபசரிப்பும் செய்திட்ட
அண்ணன்

**தோப்பில் முஹம்மது மீரானுக்கு...**

எளியேன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

– செ. திவான்


**ரெகான் சுலைமான் பதிப்பகம்**

**106F, 4A, திருவனந்தபுரம் சாலை,**
**பாளையங்கோட்டை, திருநெல்வேலி– 627002**
**போன்: 0462–2572665**

# சுந்தர ராமசாமி - பீடிகை

*அன்னைத் தமிழின்*
*அற்புத எழுத்தாளர்களில் ஒருவர்*
*அடியேன் மனங்கவர்ந்த*
*சுந்தர ராமசாமி.*

குமரிமாவட்டம் நாகர்கோவிலில் 1931 இல் பிறந்தார். மலையாளம், ஆங்கிலம், சமஸ்கிருதம் கற்றார்.

## தகழி சிவசங்கரப்பிள்ளை (1912-1999)

ஞானபீடப்பரிசு பெற்ற தகழி சிவசங்கரப்பிள்ளை கேரளத்தில் தலை சிறந்த எழுத்தாளர். அவரது **தோட்டியின் மகன்** 1947இல் வெளிவந்தது. (மலையாளத்தில் வந்தபோதும், தோட்டியுட மகன் என்ற பெயர்தான்) சுந்தர ராமசாமி 1951இல் இந்த நாவலை தமிழில் மொழி பெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்பை படித்து ஊக்குவித்தவர் தொ.மு.சி.ரகுநான் தொ.மு.சி. புதுமைப்பித்தன் வரலாற்றை, நூலாக வெளியிட்ட அதே ஆண்டில் 1951இல் புதுமைப்பித்தன் நினைவு மலரை வெளியிட்டார் சுந்தர ராமசாமி. '**முதலும் முடிவும்**' என்ற முதல் கதை அந்த மலரில் வெளிவந்தது.

## சரஸ்வதி வ.விஜயபாஸ்கரன்

வ.விஜயபாஸ்கரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த '**சரஸ்வதி**' இதழில் 1957 மார்ச் இதழில் '**தோட்டியின் மகன்**' தொடர் துவங்கியது.

## என்.எஸ்.ஆர்.

என்.எஸ்.ஆர். என்ற பெயரில் தோட்டியின் மகன் 1958 ஜூன் வரையில் தொடராக வெளிவந்தது. கி.பி. 2000 ஆகஸ்டில் தோட்டியின் மகன் 151 பக்க நூல் வடிவில் காலச்சுவடு வெளியீடாக வெளிவந்தது.

## செம்மீன்

1956இல் தகழி சிவசங்கரப்பிள்ளை செம்மீன் நாவலை எழுதினார். இந்திய குடியரசுத் தலைவர் 'விருது பெற்ற இந்த நாவலை ஆங்கிலத்தில் நாராயண மேனன் (Narayana Menon) மொழி பெயர்த்தார். சாந்தா ராமராவ் (Santha Rama Rau )

முன்னுரையோடு அந்த நூல் 212 பக்கங்களில் வெளிவந்தது. 1959இல் சாகித்திய அகதாமி விருதைப் பெற்றது. இந்த நாவல். யுனெஸ்கோ ஆதரவில் உலக மொழிகளிலும் மொழி பெயர்ப்புகள் நடந்தன. சுந்தர ராமசாமி 1962இல் தமிழில் செம்மீன் நாவலை மொழி பெயர்த்தார். 350 பக்கங்கள் கொண்ட இந்த நாவல் பல பதிப்புகள் கண்டுள்ளது.

## பசுவய்யா

சுந்தர ராமசாமியின் (உன் கை நகம் என்ற கவிதை சி.சு.செல்லப்பாவின் எழுத்து மூன்றாவது இதழில் (1959 மார்ச்) வெளிவந்தது. பசுவய்யா என்பது அவரது புனைப்பெயர். அந்தப் பெயரிலேயே தொடர்ந்து கவிதைகள் எழுதி வந்தார்.

1996இல் '**107 கவிதைகள்**' எனும் நூல் வெளிவந்தது.

## ராஜ மார்த்தாண்டன்

டிசம்பர் 2005இல் சுந்தர ராமசாமி கவிதைகள் 110 காலச் சுவடு பதிப்பக வெளியீடாக ராஜமார்த்தாண்டன் தொகுத்து வெளியிட்டுள்ளார். 239 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் சுந்தர ராமசாமி உயிரோடு இருந்த காலத்தில் தொகுப்பில் சேர்க்க விரும்பாத நான்கு கவிதைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை என்பார் ராஜமார்த்தாண்டன் (முற்கூறிய நூல் பக்கம் 8).

## மொழி பெயர்ப்புக்கவிதைகள்

1964 முதல் ஆங்கிலம் வழி தமிழில் கவிதைகளை மொழி பெயர்க்க ஆரம்பித்தார் பசவய்யா (சுந்தர ராமசாமி) புனைப் பெயர் தேவையில்லை. இயற்பெயரே போதுமானது என்று முடிவெடுத்தார். புகழ்பெற்ற 49 ஆசிரியர்களின் 101 கவிதைகளை காலச்சுவடு பதிப்பகம் 2004 நவம்பரில் '**தொலைவிலிருக்கும் கவிதைகள்**' என்ற நூலாக மொழி பெயர்ப்புக் கவிதைகளை வெளியிட்டது.

## ஒரு புளிய மரத்தின் கதை

சுந்தர ராமசாமி தனது 28வது வயதில் 1959 இல் சரஸ்வரதி இதழில் தொடராக எழுதிய முதல் நாவலான ஒரு புளிய மரத்தின் கதை எழுத ஆரம்பித்தார். அது நாலைந்து அத்தியாயங்கள் வெளிவந்தது. சரஸ்வதி இதழும் தளர்ந்தது.

*1966இல் இந்த நாவலை முழுவதுமாக எழுதி வெளியிட்டார். காலச்சுவடு 1996 மார்ச்சில் முதல் பதிப்பாக வெளியிட்டது 2014 வரை காலச் சுவடு 17 பதிப்புகளை வெளியிட்டுள்ளது. 222 பக்கங்களைக் கொண்ட இந்த நூலை ஒப்பீட்டிலக்கிய விமர்சகர் கே.எம்.ஜார்ஜ் நோபல் பரிசு பெறத் தகுதியாகக் குறிப்பிடுகிறார்.*

## நோபல் பரிசு

**'நோபல் பரிசு பெறத் தகுதியானது'** *என்று கருதப்படும் ஒரு புளியமரத்தின் கதை பெங்குயின் நிறுவனத்தால் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.*

## Tale of a Tamarind Tree

S. *கிருஷ்ணன் மொழி பெயர்ப்பில் சுந்தர ராமசாமியின் ஒரு புளியமரத்தின் கதை* Tale of A Tamarind Tree *என்று ஆங்கிலத்தில் 1995 இல் 185 பக்கங்களில் வெளிவந்துள்ளது.*

## ஜே.ஜே. சில குறிப்புகள்

*'க்ரியா' நிறுவனம் 1981 நவம்பரில் சுந்தர ராமசாமியின்* **'ஜே.ஜே. சில குறிப்புகள்'** *நூலினை 200 பக்கங்களில் வெளியிட்டது. ஜே.ஜே. சில குறிப்புகளில் வரும் பாலுவே சுரா. எனக் கருதத் தோன்றுகிறது என்பார் ச.முருகானந்தம் (ஆராய்ச்சித் தொகுதி செப்டம்பர் 1990 ஜே.ஜே. சில குறிப்புகள் சென்னை, பக்கம் 72)*

## ஞானபீட விருது

*ஜே.ஜே. சில குறிப்புகள் அற்புதமான நூல். இதற்கென்றே சுந்தர ராமசாமிக்கு ஞானபீட விருது வழங்கலாம் என்று அவர்களிடமே நேரில் அடியேன் சொல்லியிருக்கிறேன்.*

## குழந்தைகள் பெண்கள் ஆண்கள்

*சுந்தர ராமசாமியின்* **'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்'** *நாவல் டிசம்பர் 1998 இல் காலச் சுவடு வெளியீடாக 646 பக்கங்களில் வெளிவந்தது.*

## அக்கரைச் சீமையில்

*புதுமைப்பித்தன் நினைவு மலர் 1951 இல் எழுதிய* **'முதலும் முடிவும்'**, *சாந்தி 1953 இல், எழுதிய* **'தண்ணீர்'**, **அக்கரை**

**சீமையில்**', சரஸ்வதி 1958 இதழில் வெளிவந்த '**அடைக்கலம்**', 1955 இல் எழுதிய '**உணவும் உணர்வும்**', சாந்தி 1955 இல் எழுதிய '**கோவில்காளையும் உழவுமாடும்**' சரஸ்வதி 1957 இல் எழுதிய கைக்குழந்தை, அகம், சரஸ்வதி 1958 இல் '**செங்கமலமும் ஒரு சோப்பும்**' ஆகிய பத்து கதைகள் அடங்கிய தொகுப்பு ஸ்டார் பிரசுரம் சென்னை 1959 இல் வெளியிட்டது.

இதுதான் சுந்தர ராமசாமியின் முதல் சிறுகதைத் தொகுதி நூல். இதனை கலச்சுவடு டிசம்பர் 2007இல் 142 பக்கங்களில் வெளியிட்டது.

## பிரசாதம்

விஜயபாஸ்கரனின் சரஸ்வரதி இதழில், 1958இல் வெளிவந்த '**பிரசாதம்**', '**சன்னல்**', **லவ்வு**', **ஸ்டாம்பு ஆல்பம்**' 1959 சரஸ்வதி ஆண்டு மலரில் வெளிவந்த **கிடாரி** 1959 தாமரை பொங்கல் மலரில் வெளிவந்த '**சீதை மார்க்சீயக்காய்த்தூள்**' 1960 கல்கி தீபாவளி மலரில் வெளிவந்த '**ஒன்றும் புரியவில்லை**' 1960 நவசக்தி வார இதழில் வெளிவந்த '**வாழ்வும் வசந்தமும்**' 1962 எழுத்து இதழில் வெளிவந்த '**மெய் + பொய் = மெய்**' என்ற சிறுகதை ஆக ஒன்பது கதைகள் 'பிரசாதம்' என்ற தலைப்பில் தமிழ்ப் புத்தகாலயம் ஜனவரி 1964 இல் வெளியிட்டது மறுபதிப்பு ஏப்ரல் 1977 நூல் 142 பக்கங்கள்.

## திரைகள் ஆயிரம்

தீபம் 1966 ஆண்டுமலரில் சுந்தர ராமசாமி எழுதிய 'திரைகள் ஆயிரம்' உள்ளிட்ட கதைகள் 1975 இல் தமிழ்ப் புத்தகாலயம் '**திரைகள் ஆயிரம்**' என்ற தலைப்பில் தனி நூலாக வெளியிட்டது.

## பல்லக்குத் தூக்கிகள்

ஞானரதம் 1973 இல் வெளிவந்த '**அழைப்பு**', '**பல்லக்குத்தூக்கிகள்**', **சதங்கை, வாசனை போதை கொல்லிப்பாவை** 1967 இல் வெளிவந்த '**அலைகள்**' ஆகிய ஐந்து கதைகள் '**பல்லக்குத் தூக்கிகள்**' என்ற தலைப்பில் சுந்தரராமசாமியின் சிறுகதைகள் 'க்ரியா' நிறுவனத்தாரால் டிசம்பர் 1967இல் வெளியிடப்பட்டது. நூல் 90 பக்கங்கள்.

## நீல. பத்மநாபன்

*பல்லக்குத் தூக்கிகள் கதையில் 'ஒவ்வொரு மனிதனும் தனது தற்பெருமை என்ற சுமையைத் தன்னுடன் தூக்கிச் செல்கிறார் என்ற கருத்து வஞ்சப் புகழ்ச்சியாக கையாளப்பட்டிருந்தது என்பார் நீல பத்மநாபன் (சிவசங்கரி இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு முதல் தொகுப்பு - தென்னிந்திய மொழிகள், சென்னை 1998, நவீனத் தமிழ் இலக்கியம் –1. நீலபத்மநாபன் கட்டுரை பக்கம் 534).*

## சுந்தர ராமசாமி சிறுகதைகள்

*'க்ரியா' நிறுவனத்தார் சுந்தர ராமசாமியின் 48 சிறுகதைகளை 624 பக்கங்களில் சுந்தர ராமசாமி சிறுகதைகள் என்ற தலைப்பில் மார்ச் 1991 இல் வெளியிட்டார்கள்*

## மறியா தாமுவுக்கு எழுதிய கடிதம்

*சுந்தர ராமசாமி எழுதிய 12 சிறுகதைகள் '***மறியா தாமுவுக்கு எழுதிய கடிதம்***' என்ற தலைப்பில் 2004 டிசம்பரில் காலச் சுவடு நவம்பரில் வெளியிட்டது.*

*நவம்பர் 2006 இல் '***சுந்தர ராமசாமி சிறுகதைகள்***' முழுத் தொகுப்பையும் காலச் சுவடு வெளியிட்டது. மேலும்* **2008 இல் பள்ளியில் ஒரு நாய்க்குட்டி** *என்ற தலைப்பில் சுந்தர ராமசாமியின் சிறுகதைகள் வெளிவந்தது. (நான்காம் பதிப்பு ஆகஸ்ட் 2014 847 பக்கங்கள்)*

## அழைப்பு

*காலச்சுவடு பதிப்பகம் டிசம்பர் 2003 இல் வெளியிட்ட அழைப்பு கதைத் தொகுதியில்* **'காகங்கள்' 'பட்டு வாடா' 'நெருக்கடி'** *சுந்தர ராமசாமியின் மூன்று சிறுகதைகள் வெளிவந்துள்ளது.*

## காகங்கள்

*காலச்சுவடு 1991 ஆண்டு மலரில்* **'காகங்கள்'** *கதையும்,* **'பட்டு வாடா'** *கதை காலச் சுவடு ஏப்ரல் – ஜூன் 1995 லும்,* **'நெருக்கடி'** *சிறுகதை* **'சதங்கை'**, *ஏப்ரல் – ஜூன் 1996 இலும் வெளிவந்தவை ஆகும்.*

## அ.கா.பெருமாள்

**'காகங்களின் கதை'** எனும் நூலை டிசம்பர் 2006 இல் காலச் சுவடு வெளியீடாக 63 பக்கங்களில் அ.கா.பெருமாள் வெளியிட்டுள்ளார். சுந்தர ராமசாமி 65 ஆண்டுகளுக்கு மேல் வசித்த **'சுந்தர விலாஸ்'** இல்லத்தில் மாடியில் ஆறு ஆண்டுகள் அவர் முன்னின்று நடத்திய சுமார் 85 சந்திப்புகளின் வரலாற்றுப் பதிவு இந்த நூல்.

## எழுபத்தி இரண்டு

எழுபத்தி இரண்டு சிறுகதைகள் சுந்தர ராமசாமி எழுதியுள்ளதாக காலச் சுவடு பதிப்பகமே தெரிவித்துள்ளது.

## மூன்று நாடகங்கள்

**'உடல்' 'யந்திரத்துடைப்பான்' 'டாக்டர் நாகராஜன்'** என்ற மூன்று நாடகங்கள் சுந்தர ராமசாமியால் எழுதப்பட்டு மூன்று நாடகங்கள் என்ற பெயரில் காலச் சுவடு வெளியீடாக அக்டோபர் 2006 இல் 127 பக்கங்களின் வெளிவந்துள்ளது.

## புதுமைப்பித்தன் கதைகள் சு.ரா.குறிப்பேடு

புதுமைப்பித்தன் நினைவு மலரில் தனது இலக்கியப் பணியைத் தொடங்கிய சுந்தர ராமசாமி புதுமைப்பித்தன் கதைகள் சுரா. குறிப்பேடு என்னும் 220 பக்கங்களைக் கொண்ட நூலினை டிசம்பர் 2005 இல் தந்துள்ளார்.

## புதுமைப்பித்தன் 'மரபை மீறும் ஆவேசம்

2006 இல் புதுமைப்பித்தன் மரபை மீறும் ஆவேசம் நூலும் காலச்சுவடு பதிப்பகம் வெளியிடப்பட்டது. (14.10.2005 இல் சுந்தர ராமசாமி மறைவிற்குப் பின் வெளிவந்தவை ஆகும்) '1970 இதழில் புதுமைப் பித்தனின் **'மனக்குகை ஓவியங்கள்'** என்ற கட்டுரை தந்துள்ளார். .

## புதுமைப்பித்தன் கதைகளில் காலத்தின் கலை வண்ணம்

1977 இல் திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரித் தமிழ்த்துறை ஆய்வுப் பகுதிக்கருத்தரங்கில் **'புதுமைப்பித்தன் கதைகளில் காலத்தின் கலைவண்ணம்'** என்னும் கட்டுரையை வாசித்தவர் சுந்தர ராமசாமி.

## நினைவோடை

*நவீன எழுத்தாளரான சுந்தர ராமசாமி தனது நினைவோடைகளாக* **ஜீவா, கா.ந.சு., சி.சு. செல்லப்பா, கிருஷ்ணன் நம்பி** *ஆகியவை அவர்கள் உயிருடன் இருந்தபோது 2003 இல் வெளிவந்தது. அவர்களது மறைவிற்குப் பின்னர்* **ஜி.நாகராஜன் (2006), தி.ஜானகிராமன் (2007), கு.அழகிரிசாமி (2011), 2019 இல் தொ.மு.சி.ரகுநாதன், நா.பார்த்தசாரதி, ந.பிச்சமூர்த்தி, கவிமணி மௌனி, வெ.சாமிநாத சர்மா, என்.எஸ்.கிருஷ்ணன்** *ஆகியோரைப் பற்றிய நினைவோடைகளும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.*

## சுந்தர ராமசாமியின் பிள்ளை கொடுத்தாள் விளை கதை x எதிர்வினை

*சுந்தர ராமசாமி (காலச் சுவடு 62) பிப்ரவரி 2005 இல் எழுதிய கதைக்கு எதிர்வினையாக பிரபலமான எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகள் அக்டோபர் 2006 காலச் சுவடு பதிப்பகத்தாரால் 125 பக்கங்களில் வெளிவந்துள்ளது.*

## காலச்சுவடு கண்ணன்

*சுந்தர ராமசாமியின் பிள்ளைகள் தைலா, கண்ணன், தங்கு, (மூத்த மகள் சௌந்ரா 1996 இல் காலமானார்.) இதில் கண்ணன் அவர்கள் தனது தந்தையார் 1988 இல் நிறுவிய காலச்சுவடு இதழைத் திறம்பட நடத்தி வருகிறார். அடிக்கடி சென்னை, மதுரை புத்தகக் கண்காட்சியில் அவர்களைச் சந்தித்திருக்கிறேன்.*

## குமரியில் நடந்த கூட்டம்

*கன்னியாகுமரியில் இஸ்லாமிய எழுத்தாளர்களை அழைத்து கொடிக்கால் ஷேக் அப்துல்லா, இல்லத்தில் நடத்திய கூட்டத்திற்கு காலச்சுவடு ஏற்பாடு, செய்திருந்தது. அதில் பங்கேற்றபோது அவருடன் பேசியிருக்கிறேன்.*

## தந்தையை போலவே

*தந்தை சுந்தர ராமசாமியைப் போலவே காலச்சுவடு கண்ணனும் எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் பிள்ளை கொடுத்தாள்வினை. கதை எதிர்வினை நூலில் கண்ணன்* **மரணத்தில் நிழல்** *என்ற பின்னுரை பத்துப்பக்கங்கள் எழுதியுள்ளார்.*

## வன்முறை வாழ்க்கை

*1965 இல் பிறந்து, 1994 இல் காலச் சுவடு இதழை மீண்டும் துவக்கி 1995 இல் காலச் சுவடு பதிப்பகத்தை ஆரம்பித்த காலச்சுவடு கண்ணன் '***வன்முறை வாழ்க்கை நிகழ் பண்பாட்டுக்கட்டுரைகள்***' என்ற நூலை டிசம்பர் 2003 இல் 143 பக்கங்களில் வெளியிட்டள்ளார். தினமணி, புதிய பார்வை, காலச்சுவடு, இந்து தமிழ்திசை போன்ற இதழ்களில் கண்ணன், எழுதிய கட்டுரைகள் நூல் வடிவில் வெளிவந்துள்ளது.*

## சுந்தர ராமசாமி கட்டுரைகள்

*க்ரியா ஆகஸ்ட் 1984 இல் சுந்தர ராமசாமி கட்டுரைகள் எனும் நூலினை 152 பக்கங்களில் வெளியிட்டுள்ளது. '***நான் காணும் பாரதி***' துவங்கி தளைய சிங்கத்தின் '***பிரபஞ்ச யதார்த்தம்***' ஆகிய 15 கட்டுரைகள் அதில் இடம் பெற்றுள்ளன.*

## விரிவும் ஆழமும் தேடி

*சுந்தர ராமசாமியின் '***விரிவும் ஆழமும் தேடி***' கட்டுரைத் தொகுதி* **இலக்கியமும் இதழியலும்** *என்ற தாமிரபரணி ஆகஸ்ட் 1998 கட்டுரையுடன் நிறைவடைந்து 303 பக்கங்களில் வெளியாகியுள்ளது. ந.பிச்சமூர்த்தியின் கலை மரபும் மனித நேயமும் (1991) இவை என் உரைகள் (2003) வானகமே இளவெயிலே மரச்செறிவே (2004) மனக்குகை ஓவியங்கள் (2011), வாழ்க சந்தேகங்கள் (2004) வாழும் கணங்கள் (2005)* **தமிழகத்தில் கல்வி வசந்த தேவியுடன் உரையாடல்** *(2000) (205 பக்கங்கள்) (சந்திப்பு சுந்தர ராமசாமி) ஒரு தடா கைதிக்கு எழுதிய கடிதங்கள் (2006) ஆகிய நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்திருப்பதை காலச்சுவடு வெளியீடுகள் மூலம் அறிய முடிகிறது.*

## இதம் தந்த வரிகள்

*கு.அழகிரிசாமி, சுந்தர ராமசாமி கடிதங்கள் (1923–1970) தொகுக்கப்பட்டு* **இதம் தந்த வரிகள்** *என்னும் நூலாக 2002 இல் 98பக்கங்களில் வந்துள்ளது.*

## நேற்றைய கடிதங்கள் பற்றி இன்றைய நினைவுகள்

*புதுக்கோட்டையில் கிருஷ்ணமூர்த்தி நூலகத்தில் கு.அழகிரிசாமியின் ஒரு கடிதத்தைப் பார்த்தார் சுந்தர ராமசாமி.*

"அதில் குறிப்பிடத்தகுந்த செய்திகள் எதுவும் இருக்கவில்லை. அந்தக் கடிதத்தை கிருஷ்ணமூர்த்தி பத்திரப்படுத்தியிருந்த விதம் எனக்குக் குற்ற உணர்ச்சியையும் வருத்தத்தையும் அளித்தன. கு.அ.எனக்கு எழுதிய கடிதங்கள் எவ்வளவோ? இக்கடிதங்களை இப்போது படித்தபோது என் இளமை வாழ்க்கை சார்ந்த எண்ணற்ற நினைவுகள் எனக்குள் துளிர்த்தன. இக்கடிதங்களை நண்பர் ராஜ மார்த்தாண்டன் தொகுத்து **இதம் தந்த வரிகள்** நூலாக வருவதில் பெரும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறேன் என்ற 10.12.2002 இல் சுந்தர ராமசாமி எழுதியிருப்பார்கள். அடியேன் கு.அழகிரிசாமியும் இல்லை. அதைப்போல சுந்தர ராமசாமியாகவும் இல்லை. ஆனால் அவருக்கு இருந்த உள்ள உணர்வைப் பின்பற்றி சுந்தர ராமசாமி எளியேனுக்கு எழுதிய கடிதங்கள் சிலவற்றைப்பதிவு செய்வதில் பெருமிதம் கொள்கிறேன். பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## முதலும்

சுந்தர ராமசாமி அவர்களை முதன் முதலில் எங்கு சந்தித்தேன் எப்போது சந்தித்தேன், என்ன பேசினேன் நினைவோடையிலிருந்து மறந்தே போய்விட்டது.

## முடிவும்

பாளையங்கோட்டையில் வாழ்ந்துவரும் பண்பாட்டு இயல் அறிஞர் தொ.பரமசிவம் அவர்களது புதல்வியின் திருமணம் பாளையங்கோட்டை பி.பி.எல். திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த விழாவிற்கு சுந்தர ராமசாமி அவர்கள் அம்பாசிடர் காரில் வந்ததாக நினைவு. அவர்களை அருகில் சென்று சந்தித்தேன் புன்னகை ததும்பும் முகத்துடன் உற்சாகத்துடன் என்னிடம் பேசினார்கள். 'நாம் கொஞ்சம் இருந்து பேசவேண்டும் என்ன செய்வது; பயணத்திட்டங்கள்; பல்வேறு பணிகள். தற்போது கூட அமெரிக்கா செல்ல இருக்கிறேன். அமெரிக்கா சென்று திரும்பியதும் மீண்டும் சந்திப்போம் என்றார்கள். அதுவே சுந்தர ராமசாமியுடனான கடைசி சந்திப்பு என்பதனை இறைவனைத்தவிர யார்தான் அப்போது அறிந்திருக்க முடியும்?

## வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்

அடியேன் ஏழு ஆண்டுகள் ஆய்வு செய்து முதலில் சொந்தமாகவே வெளியிட்ட நூல் '**வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்**'.

அதன் பின் 'விகடன் பிரசுரம்' அதனை இரண்டு பதிப்புகள் வெளியிட்டுள்ளது. தற்சமயம் சென்னையில் நண்பர் ஒருவர் அதனைத் திரும்பவும் மறுபதிப்பு கொண்டு வர இருக்கிறார்.

'அந்த நூல் சுந்தர ராமசாமி கரம் கிடைத்ததும் என்பால் கருணையோடு அவர்கள் எழுதிய கடிதம் இதோ :

சுந்தர ராமசாமி

669 கே.பி.சாலை
நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 - 223169

20.07.2001

மதிப்பிற்குரிய திரு. திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

நெல்லையில் உங்களைச் சந்தித்த போது நீங்கள் எழுதியுள்ள 'வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப்' நூலை அன்புடன் எனக்கு அளித்தீர்கள். சூழலின் அழுத்தத்தினால் சாவகாசமாக உங்களுடன் பேச முடியாமல் போயிற்று. மன்னிக்கவும். சிறிது ஓய்வு கிடைக்கும்போது உங்கள் படைப்பை அவசியம் படித்துப் பார்க்கிறேன். நாம் மேலும் சந்தித்துக் கொள்ளும் சந்தர்ப்பம் உருவாகும் என்றும் நம்புகிறேன்.

அன்புடன்,

## சுந்தர ராமசாமி

*20.7.2001* தேதியிட்ட சுந்தர ராமசாமியின் கடிதம் கைகளுக்கு கிடைத்ததும் எனக்குள்ளே பெரிதும் மகிழ்ச்சி. உடனே மேலும் நான் எழுதிய சில நூல்களை அவர்களுக்கு விரைந்து அனுப்பி வைத்தேன்.

## 28.7.2001

*28.7.2001* அன்று சுந்தர ராமசாமி அவர்கள் அடியேனுக்கு அன்போடு அனுப்பிய கடிதம் இதோ :

சுந்தர ராமசாமி

669 கே.பி.சாலை
நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 – 223169

28.07.01

மதிப்பிற்குரிய திரு. திவான் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் 21.07.01 கடிதமும் நீங்கள் மிக்க அன்புடன் எனக்கு அனுப்பியிருந்த நூல்களும் கிடைத்தன.

வாசிப்பில் நீங்கள் காட்டியுள்ள தீவிரம் என்னை வியப்பில் ஆழ்த்துகிறது. நூல்களின் தலைப்பே உங்களுடைய விரிந்த, சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் மெய்ப்படச் செய்கிற பார்வையைக் காட்டுகிறது.

அலுவல் மிகுதியால் உங்கள் நூல்களை இன்னும் நான் படித்துப் பார்க்கவில்லை. மன்னியுங்கள். பணிகள் பலவற்றையும் முடித்திருக்க வேண்டிய தேதிகளில் முடிக்க இயலாமல் வெகுவாகப் பிந்திச் செய்துக் கொண்டிருக்கிறேன். சிறிது அவகாசம் கிடைத்ததும் ஒருசேர எல்லாவற்றையும் படித்துவிட முடியும் என்று நம்புகிறேன். நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் விஷயங்கள் மீது எனக்கு மிகுந்த ஆர்வம் இருக்கிறது.

உங்கள் நூல்களை நீங்களே வெளியிட்டு வருகிறீர்கள் எனக் கருதுகிறேன். இது ஒரு ஊகம்தான். இந்நிலையில் நீங்கள் அனுப்பியுள்ள எல்லா நூல்களையும் இலவசமாகப் பெற்றுக் கொள்வது முறையான காரியம் அல்ல என்று எனக்குப் படுகிறது. இளைஞர்களின் முனைப்பான ஆர்வங்கள் திசை திருப்பப்படும் நம் சமூகத்தில் வாசகர்கள் மூளை மழுங்கடிப்புக்கு ஆளாகி விடுகிறார்கள். இந்நிலையில் புத்தக விற்பனை மட்டாகவே நடைபெற முடியும்.

நீங்கள் அனுப்பியிருக்கும் புத்தகங்களின் விலையை தயவுசெய்து எனக்குத் தெரிவியுங்கள்.

நேரில் சந்தித்துப் பேச விரும்புகிறேன். நெல்லைப் பக்கம் வர நேர்ந்தால் அவசியம் உங்களைச் சந்திக்கிறேன்.

மிக்க அன்புடன்,

## புதுமைப்பித்தன் கதைகள்

*ஆகஸ்ட் 2000 இல் புதுமைப்பித்தன் கதைகளை பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி காலச்சுவடு வெளியீடாக வெளியிட்டார். அது 2001 சூனில் திருத்தங்களுடன் இரண்டாம் பதிப்பாக 824 பக்கங்களில் வெளிவந்தது.*

## 30.7.2001

*எனது மதிப்பிற்கும் என்றென்றும் உரிய அய்யா சுந்தர ராமசாமி 30.7.2001 இல் எழுதிய கடிதம் இதோ.*

**சுந்தர ராமசாமி**

669 கே.பி.சாலை
நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 – 223169

30.07.01

மதிப்பிற்குரிய திவான அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிய நான்கு புத்தகங்களும் இப்போது கிடைத்தன. உங்கள் புத்தகங்களைப் படிப்பதற்கு மட்டுமே மூன்று மாதங்கள் ஒதுக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அவ்வளவு நூல்கள் எழுதியிருக்கிறீர்கள். உங்கள் முயற்சிகள் மேலும் வெற்றி பெற என் வாழ்த்துகள்.

இத்துடன் 'புதுமைப்பித்தன் கதைகள்' தொகுப்பை உங்களுக்கு என் அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறேன்.

அன்புடன்

## புதுமைப்பித்தன் கதைகள் நூல் அன்பளிப்பாக

*30.7.2001 நாளிட்ட சுந்தர ராமசாமி கடிதத்துடன் புதுமைப்பித்தன் தன் கதைகள் முழுத் தொகுப்பு நூலையும் அவர்கள் கையெழுத்திட்டு அன்போடு அடியேனுக்கு அனுப்பியிருந்தார்கள். அந்த நூலின் முகப்புப் பக்கம் இதோ :*

# புதுமைப்பித்தன் கதைகள்

முழுத் தொகுப்பு

மதிப்புமிகு
திரு செ. திவான்
அவர்களுக்கு
மிக்க அன்புடன்,
30.07.01

பதிப்பாசிரியர்

ஆ. இரா. வேங்கடாசலபதி

காலச்சுவடு பதிப்பகம்

## வீரபாண்டிய கட்டபொம்மன் - வ.உ.சி, குறித்த நூல்கள்

அடியேன் எழுதிய வீரபாண்டிய கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும், வ.உ.சி.யும் திருக்குறளும் போன்ற நூல்கள் சுந்தர ராமசாமி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

## 5.1.2002

*5.1.2002* இல் சுந்தரராமசாமி அவர்கள் அடியேனுக்கு அன்போடு தந்த கடிதம் இதோ:

**சுந்தர ராமசாமி**

669 கே.பி.சாலை
நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 – 223159, 222525

05.01.02

மதிப்பிற்குரிய திரு. திவான் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் 04.01.02 கடிதமும், அன்புடன் கூரியரில் அனுப்பி வைத்திருந்த, 1. கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும், 2. வ.உ.சி.யும் திருக்குறளும், 3 பெரியபுராணத்தில் வாழ்க்கை நெறி, 4. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி ஆகிய நான்கு புத்தகங்களும் கிடைத்தன. மிக்க மகிழ்ச்சி.

புத்தகங்களை இலேசாகப் புரட்டியபோதே நீங்கள் தொகுத்துத் தந்துள்ள செய்திகள் நிறைய இருப்பதை உணர்ந்தேன். சற்று ஓய்வு கிடைத்ததும் படித்துப் பார்க்கிறேன்.

தொ.மு.சி. யின் இரங்கல் கூட்டத்தில் நான் பேசியதும், தினமணியில் நான் எழுதியிருந்த 'தமிழ் சார்ந்த சுயநலம்' என்ற கட்டுரையும் நீங்கள் விரும்பும்படி இருந்தது மனநிறைவைத் தந்தது.

அன்று தொ.மு.சி. யின் வீட்டிற்கு நான் வந்திருந்தபோது நீங்கள் வந்திருக்கிறீர்களா என்று தி.க.சி.யிடமும் தோப்பிலிடமும் பிற நண்பர்களிடமும் விசாரித்தேன். எல்லோரும் வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்போதுதான் தெரிகிறது நீங்கள் வந்திருந்தீர்கள் என்பது. உங்களைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல் நிறைவேறாமல் போய்விட்டது.

உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்களும் பொங்கல் வாழ்த்துக்களும்.

அன்புடன்,


अन्तर्देशीय पत्र कार्ड
INLAND LETTER CARD

भारत INDIA 2.00

திரு. செ. திவான், எம்.ஏ., எம்.பில்.,
சுஹைறா பதிப்பகம்
106-F, 4-A, திருவனந்தபுரம் ரோடு
பாளையங்கோட்டை पिन PIN 6 2 7 0 0 2
தமிழ் நாடு

दूसरा मोड़ SECOND FOLD

इस पत्र के भीतर कुछ न रखिए NO ENCLOSURE ALLOWED
पते में पिन कोड लिखें WRITE PIN CODE IN ADDRESS
प्रेषक का नाम और पता :– SENDER'S NAME AND ADDRESS :–

சுந்தர ராமசாமி
669 கே.பி. சாலை
நாகர்கோவில் - 1
पिन PIN

## 8.11.2002

*சுந்தர ராமசாமி அவர்களுக்கு 8.11.2002 அன்று மீண்டும் மடல் எழுதினேன். அவர்கள் அன்போடு 12.11.2002 இல் எளியேனுக்குத் தந்த பதில் கடிதம் இதோ :*

சுந்தர ராமசாமி
**Sundara Ramaswamy**

12.11.02

மதிப்பிற்குரிய நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். உங்கள் 8.11.02 கடிதம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி.

உங்கள் உடல்நலம் இப்போது சீராக இருக்கும் என்று நினைக்கிறேன்.

நீங்கள் அன்புடன் எனக்கு அனுப்பி வைத்திருந்த, 'ஆலிப்புலவர்', 'வ.உ.சி' இரண்டையும் பெற்றுக்கொண்டேன். நன்றி. நீங்கள் என் மீது கொண்டிருக்கும் அன்பு மகிழ்ச்சியைத் தந்தது.

காலச்சுவடு பதிப்பக நூல்களை நீங்கள் தொடர்ந்து வாங்கி வருவதைப் பாராட்டுகிறேன்.

என் மகன் கண்ணன் வெளிநாட்டில் இருக்கிறான். இன்னும் ஒரு வாரத்தில் அவன் ஊர் திரும்புவான் என்று எதிர்பார்க்கிறோம். வந்ததும், 'புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்புக் கதைக'ளை வெளியிட வேண்டுமென, நீங்கள் முன் வைத்திருக்கும் யோசனையை அவனிடம் தெரிவிக்கிறேன்.

நண்பர் சலபதி எழுதியுள்ள 'அந்தக் காலத்தில் காப்பி இல்லை' என்ற நூலை இத்துடன் இணைத்திருக்கிறேன். என் அன்பளிப்பாக இதை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

உங்கள் தமிழ்த்தொண்டு மேலும் சிறப்படைய என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

## அந்தக் காலத்தில் காப்பி இல்லை

*ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதிய 'அந்தக் காலத்தில் காப்பி இல்லை முதலான ஆய்வுக் கட்டுரைகள் நூல் காலச்சுவடு வெளியீடாக ஆகஸ்ட் 2000 இல் 229 பக்கங்களில்*

வெளிவந்தது. அந்த நூலை அன்போடு சுந்தர ராமசாமி அவர்கள் கையொப்பமிட்டு அடியேனுக்கு அன்பளிப்பாக அனுப்பிவைத்தார்கள் இதோ அந்த நூலின் முகப்புப் பக்கம்.



## அந்தக் காலத்தில் காப்பி இல்லை

**முதலான ஆய்வுக் கட்டுரைகள்**

நவீனத் தமிழக உருவாக்கத்தின் பின்புலத்தில் சமூகப் பண்பாட்டு மாற்றங்களை ஆராயும் கட்டுரைகள் இவை. தற்காலத்தைப் புரிந்துகொள்வதற்குக் கடந்த காலத்தை விமரிசன நோக்கோடு பார்க்க வேண்டும் என்பதை வற்புறுத்தும் பார்வை இவற்றின் ஊடுசரடு. காப்பியும் புகையிலையும் தமிழ்ச் சமூகத்தில் எதிர்கொள்ளப்பட்ட முறை; திராவிட இயக்கத்தின் மொழி சார்ந்த அரசியல்; பாரதியின் எழுத்து வாழ்க்கை பற்றிய சமூகவியல் நோக்கு; கருத்துப்படங்கள், பகடி ஆகிய கலை வடிவங்கள் தமிழ் மரபில் பெறும் இடம் முதலானவை ஆராயப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரை என்றால் சுவையற்றிருக்கும் என்ற நினைப்பை முறியடித்து விறுவிறுப்பான நடையில் இவை எழுதப்பட்டிருக்கின்றன.

ஆ. இரா. வேங்கடாசலபதி (1967) வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் பிறந்தவர். சென்னை மறைமலையடிகள் நூல்நிலையத்தில் பணியாற்றியவர். புது தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி. பட்டம் பெற்றவர். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வரலாற்று விரிவுரையாளர். சிகாகோ பல்கலைக்கழகத்தில் வருகைதரு உதவிப் பேராசியராகவும் பணியாற்றி இருக்கிறார்.

## தீர்க்க தரிசனம்

*'திவான்' ஒரு காலத்தில் தான் எழுதிய கடிதங்களை அச்சில் போடுவார் என்ற தீர்க்கதரிசனத்துடன் 31.10.2004 இல் சுந்தர ராமசாமி எழுதிய கடிதம் (கடிதத்தில் பின் குறிப்பு பகுதியைக் கவனமாக வாசித்தால் அடியேன் சொல்வது நிஜமென நம்புவீர்கள்)*

**சுந்தர ராமசாமி**

669 கே.பி.சாலை
நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 – 278159, 278525
Email: suraa@sancharnet.in

30.10.04

மதிப்பிற்குரிய திவான் அவர்களுக்கு,

வணக்கம். நான் வெளிநாட்டிலிருந்து சமீபத்தில்தான் ஊர் திரும்பினேன். நீங்கள் அன்புடன் எனக்கு அனுப்பி வைத்திருந்த, 'விடுதலைப்' போரில் வீரமிகு முஸ்லிம்கள்', 'வியத்தகு சாதனையாளர் வைகோ', 'மாநபி [ஸல்] காட்டிய மனித உரிமைகள்' ஆகிய மூன்று புத்தகங்களும் கிடைக்கப் பெற்றேன். நீங்கள் முன்னர் அனுப்பிய புத்தகங்களும் எனக்குக் கிடைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உங்கள் அயராத உழைப்பு எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

என் அன்பார்ந்த வாழ்த்துக்களுடன்,

பின்குறிப்பு: எப்போதேனும் நீங்கள் என் பெயரை அச்சிட நேர்ந்தால் சுந்தரராமசாமி என்று சேர்த்து அச்சிடாமல் சுந்தர ராமசாமி என்று பிரித்து அச்சிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2
Sundara Ramasamy_Ctp.jobFORM 2

## 2020

*2020இல் 16 ஆண்டுகள் கழித்து சுந்தர ராமசாமி பெயரை அச்சிட எளியேனுக்கு வாய்ப்பளித்த இறைவனுக்கும் காலத்திற்கும் நன்றி.*

## 2001 - 2003

*டொரொன்டோ (கனடா) பல்கலைக்கழகம் சுந்தர ராமசாமிக்கு வாழ்நாள்* **இலக்கியச் சாதனைக்கான இயல் விருதை** *வழங்கியுள்ளது. 2003 இல் வாழ்நாள் இலக்கியப் பணிக்காகக்* **கதா சூடாமணி** *விருதையும் பெற்றவர் சுந்தர ராமசாமி. அவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு சாகித்ய அகாதெமி ஞானபீட விருதுகள் வழங்கப்பட்டிக்கவேண்டும். 14.10.2005 இல் அமெரிக்காவில் சுந்தர ராமசாமி காலமானார். தமிழ் இலக்கியத்திற்கு பேரிழப்பு; அவருக்கு விருதுகள் வழங்கப்படாதது விருதுகளை வழங்குபவர்களுக்குத்தான் அதைவிடப் பேரிழப்பு என்பதை மட்டும் உறுதியாகச் சொல்கிறேன்.*

## எங்கள் நினைவில் சு.ரா. குடும்பத்தாரின் நினைவுகள்

*சுந்தர ராமசாமியின் துணைவியார் கமலா ராமசாமி, மகள் தைலா ராமானுஜம், மகன் தங்குராமச பேரன் நந்து சுந்தரம்தனு, ராம்சாரங்கன், நிஷா, முகுந்தன் நினைவுகளோடு எங்கள் நினைவில் சு.ரா.குடும்பத்தாரின் நினைவுகள் நூல் டிசம்பர் 2006 இல் வெளிவந்தது நூல் 64 பக்கங்கள் வெங்கடாசலம், ஜேசுதாசன், பத்பநாபன் சார், ஜி.நாகராஜன், கி..சச்சிதானந்தம், சிவராமன், சுரேஷ்குமார், இந்திரஜித், ரவீந்திரன் தியோடர் பாஸ்கரன், திலீப்குமார், லட்சுமணன், அம்பை, அ.கா. பெருமாள், இராஜேந்திரன், ராஜமார்த்தாண்டன், சுகுமாரன், ஸ்ரீனிவாசன், தண்டபாணி, யுவன், சலபதி, ராமநாதன், நண்பர் நெய்தல் கிருஷ்ணன், அரவிந்தன், அய்யனார், அனந்த கிருஷ்ணன், சல்மா, உமா மகேஸ்வரி, சிபிச் செல்வன், தேவி பாரதி, தனபால், கவிதா இவர்கள் சுந்தர ராமசாமி குறித்த நினைவுகளைப் பதிவு செய்துள்ளார்கள்.*

## அடிவானத்துக்கு அப்பால்

*அக்டோபர் 2014 காலச்சுவடு இதழ் 178 அடிவானத்துக்கு அப்பால் என்று சுரா நினைவுகளை வெளியிட்டது. அதில் அ.கா.பெருமாள், கே.என்.செந்தில் கட்டுரைகள் வெளிவந்தது.*

## கமலா ராமசாமி

எனது மதிப்பிற்குரிய சுந்தர ராமசாமியின் வாழ்க்கைத் துணைவியார் கமலா ராமசாமி '**ஜகதாமாமி**' என்ற கட்டுரையை அதில் தந்திருந்தார். அக்டோபர் 2015 காலச்சுவடு இதழ் 190 சுந்தர ராமசாமியின் நிறை நினைவின் பதிற்றாண்டு இதழாக வந்தது '**காலத்தில் நிற்கும் பெயர்**' – **நெய்தல் கிருஷ்ணன்**, '**காலமாற்றத்தின் காட்சிகள், ம.மணிமாறன்**, '**இதயத்தால் கேட்டவர்**' – முடவன் குட்டி முகம்மது அலி கட்டுரைகள் பிரசுரமானது.

## காலச்சுவடு அறக்கட்டளை

2011 மே மாதத்தில் காலச் சுவடு அறக்கட்டளை சுந்தர ராமசாமி துணைவியார் எழுதிய சுந்தர ராமசாமி பற்றிய நினைவுகள் நூலினை 159 பக்கங்களில் வெளியிட்டது.

## நெஞ்சில் ஒளிரும் சுடர்

நெஞ்சில் ஒளிரும் சுடர் என்ற தலைப்பில் கமலா ராமசாமி எழுதிய அந்த நூலினை அடியேனுக்கு அம்மையார் 18.11.2015 அன்று கையொப்பமிட்டு அனுப்பியிருந்தார்கள்.

கமலா ராமசாமி
18.3.15

கொற்கை பீர்முகம்மது

நாகர்கோவில்
19.03.2015

அன்புள்ள அண்ணன் அவர்களுக்கு!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)

நாங்களும் தங்கள் இறையருளால் நலம்தானே!

தங்களிடம் சொன்னபடி, புத்தகம் அனுப்ப தாமதமாகி விட்டது. வைக்கம் பஷீரின் மனைவி எழுதிய 'எடியே' நூல் இன்னும் தயாராகவில்லை. வேலைகள்தான் நடந்துகொண்டிருக்கின்றன. அது தயாரானதும் நாம் அனுப்பிவைக்கலாம் என்று கண்ணன் சொன்னார்.

இப்போது தாங்கள் கேட்டுக்கொண்டபடி கமலாம்பாள் அவர்களின் கையெழுத்து பெற்று அனுப்பிவைத்துள்ளேன். இது காலச்சுவடின் அன்பளிப்பு.

~~இந்த~~ கடந்த மாதம் சு.ரா. தங்களுக்கு எழுதிய கடிதங்களைப் பிரசுரம் செய்திருந்தோமே! பார்த்தீர்களா? காலச்சுவடுக்கு ஏற்றாற்போல வரலாற்றுக் கட்டுரைகளை எழுதலாம்தானே! யோசித்துப் பாருங்கள்.

நன்றி! வஸ்ஸலாம்.

நிறைந்த அன்புடன்

அ. பீர்முகம்மது
19.03.15.

## களத்தை பீர் முகம்மது

*எனது பிரியத்திற்குரிய சகோதரர் களத்தை பீர்முகம்மது அந்த நூலோடு அவரும் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதமும் அன்னையார் கமலா ராமசாமி கையொப்பமிட்ட நூலின் முகப்புப் பக்கமும் இதோ :*

## சாகித்திய அகாதெமி பரிசு மிகச்சிறியது

*சுந்தர ராமசாமி 2.1.2002 தினமணியில் நடுப்பக்கத்தில் எழுதிய கட்டுரை '**தமிழ் சார்ந்த சுயநலம்**' அதில் குறிப்பிடுவார் சாகித்திய அகாதெமி பரிசு மிகச்சிறிய பரிசு ஒரு மொழியில் ஒரு படைப்பாளி சாகித்திய அகாதெமி பரிசு பெற்றாலும் இந்திய வாசகர்கள் மத்தியிலோ, அல்லது இந்திய எழுத்தாளர்கள் மத்தியிலோ கூட அவர் பெயர் நினைவு கொள்ளும்படி அறிமுகமாகி விடுவதில்லை. தன் மறைவுக்குப்பின் செல்லப்பா பரிசு பெறுவது தமிழ்ச் சூழலின் அவலத்தையே காட்டுகிறது.*

*சாகித்திய அகாதெமி பரிசு தரத் தொடங்கிய காலம் முதல் இன்று வரையிலும் பரிசு பெற்றவர்களில் பலரும் இவ்விருது பெறத்தகுதியற்றவர்கள் என்றும், குறுக்கு வழியில் அப்பரிசுகளைப் பெறுவதில் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றும் நான் நம்புகிறேன்.*

## தமிழ் சார்ந்த சுயநலம்

*அத்துடன் சாகித்திய அகாதெமியின் மீது விமர்சனம் வைப்பவர்களை அப்பரிசு கிடைக்காததால் விமர்சனம் என்ற பெயரில் புலம்பிக் கொண்டிருப்பவர்கள் என்று பழிக்கவும் அவர்களால் முடிகிறது. ஏனெனில் தமிழ் சார்ந்த சுயநலம் இன்றைய விதி பொதுநலம் இன்றைய விதி விலக்கு' ஆயிரக்கணக்கான பக்கங்கள் எழுதி அவனிக்குத்தந்திட்ட சுந்தர ராமசாமியின் இந்த எழுத்து எளியேனின் இதயத்தில் பதிந்த எழுத்து. இதய பூர்வமாக அவருக்கு நன்றி சொல்ல இச்சிறு நூலைத் தந்துள்ளேன்.*

*சுரா புகழ் ஓங்கி வளர்க!*

ரெகான்
சுலைமான்
பதிப்பகம்